1970 மார்ச் 11]

இணைப்பு 2

[122-ம் பக்கத்தில் 320-ம் எண்ணுள்ள வெள்விக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.]

(*a*) The Tamil Nadu Mineral Development Project under the United Nations Development Programme is carrying out aerial surveys, detailed mapping and investigations for all minerals in the Project area which forms about 8,000 square miles (or 20,000 Square kilometres), consisting of parts of Salem, North Arcot, South Arcot and Dharmapuri districts. The iron ore deposits which fall within this Project area are also being investigated by them as part of their programme.

(*b*) Air-borne magnetometric survey and photogeological mapping of the project area has been carried out and the iron ores brought out by these surveys are being mapped. The important deposits of iron ore which lie within the project area are as follows :—

Salem district.—The iron deposits at Kanjamalai, Godumalai, Palaniyapur, those near Thumbal and Chiteri Hills.

South Arcot district.—A number of small iron ore bands in Kalrayan Hills.

North Arcot district.—A number of iron ore bands near Polur and those of Kavuthimalai and other occurrences near Thiruvannamalai.

Some of the iron ore deposits particularly those at Kanjamalai, Godumalai and Thirthamalai have already been mapped and investigated by the Geologists of the Government of Tamil Nadu and some by the Geological Survey of India. The Tamil Nadu Mineral Development Project has taken up detailed survey of the deposit in Kavuthimalai Reserve Forest near Thiruvannamalai in view of its proximity to the Railway line and other transport facilities. The work is still under progress.

விடை.—(அ) சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் பகுதிகளடங்கிய ஏறத்தாழ 8,000 சதுர மைல் (20,000 சதுர கிலோமீட்டர்) திட்டப்பகுதியில் கிடைக்கூடிய எல்லாக் கனிவளங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டம், விமான ஆய்வு, விரிவான நிலப்படம் தயாரித்தல், புலனாய்வுகள் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. திட்டப் பகுதிக்குள் காணப்படும் இரும்புக்கனி படிவங்களைக் குறித்து புலனாய்வு செய்வதும் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப் பட்டுள்ளது.

(இ) திட்டப் பகுதியில் சாற்றாடான காந்தவியல் ஆய்வு (Air borne magnete metric survey) நிழற்பட நிலவியல் ஆய்வு Photogeological mapping) ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இந்த ஆய்வுகளின் மூலம் இரும்புக்கனிகள் காணப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இடங்கள் நிலப்படங்களில் குறித்துக்

[1970 மார்ச் 11

கொள்ளப்பட்டு வருகின்றன. திட்டப் பகுதிக்குள் காணப்படுகிற இரும்புக்கனிப் படிவங்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—

சேலம் மாவட்டம்.—கஞ்சமலை, கோதுமலை, பழநியாபுரி ஆகிய இடங்களில் உள்ள இரும்புக் கனிப்படிவங்களும், தும்பல், சித்தேரி குன்றுகளின் அருகில் காணப்படும் இரும்புக் கனிப் படிவங்களும்.

தென் ஆர்க்காடு மாவட்டம்.—கால்லராயன் குன்றுகளில் காணப்படும் பல சிறு இரும்புக்கனிபடிவங்கள்.

வட ஆர்க்காடு மாவட்டம்.—போளூருக்கு அருகே காணப் படும் பல இரும்புக் கனிப்படிவங்களும், கவுதிமலை, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் காணப்படும் இரும்புக்கனிப் படிவங்களும்.

சில இரும்புக் கனிப்படிவங்கள் குறித்து, முக்கியமாக கஞ்ச மலை, கோதுமலை, தீர்த்தமலை ஆகிய இடங்களில் காணப்படுகிற சில இரும்புக்கனிப் படிவங்கள் ஏற்கெனவே நிலப்படங்களில் குறிக்கப்பட்டு, தமிழ் நாடு அரசின் கனிவள ஆராய்ச்சி யாளர்களால் ஆய்வுசெய்யப்பட்டன. மற்றும் சிலவற்றைக் குறித்து இந்திய அரசின் கனிவள ஆய்வுக் குழுவினர் ஆய்வு செய்தனர். ரயில்வே இருப்புப் பாதைக்கும் மற்ற போக்குவரத்து வசதிகளுக்கும் மிக அண்மையில் அமைந்துள்ளதால், திருவண்ணாமலைக்கருகில் கவுதிமலை ஒதுக்கக் காடுகளில் காணப் படுகின்ற இரும்புக்கனிப் படிவங்கள் குறித்து, தமிழ்நாடு கனிவள மேம்பாட்டுத் திட்டக்குழுவினர், விரிவான ஆய்வு மேற் கொண்டுள்ளனர். பணி இன்னும் நடந்தேறிவருகிறது.

இணைப்பு 3

[134-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மானியக் கோரிக்கை—13 கல்வி

1970-71

I தோற்றுவாய்

1. ஒரு சமூகம் தனது குடிமக்களுக்கு வழங்குகிற கல்வியின் அளவையும், தரத்தையும் ஒட்டியே தற்கால உலகின் சமுதாய முன்னேற்றம் மதிக்கப்படுகிறது. மாநில வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும், ஆண்டுத் திட்டங்களிலும், கல்வித் திட்டங்களை வகுக்கும்போது, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப் படை கொள்கையாகக் கல்வி அமைந்திருப்பது சற்றும் மறக்கப் படவில்லை. உண்மையில் மாநில வரவு-செலவு திட்டத்தில் வருவாய்க் கணக்கின்மீதான மொத்தச் செலவில் சுமார் 23 சதவீதம் கல்விக்குரியதாகும். இந்தச் செலவு 1959-60-ல் ரூ. 15.15 கோடியாக இருந்தது 1970-71-ல் ரூ. 66.83 கோடியாக உயர்ந்